டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.9.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 085 - Madurai | Online Edition

# தென் மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!! வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, செப்.26

நாளை (செப். 28) 19 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக் கையில், மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று (செப்.27) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

நாளை 28ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

29ம் தேதி அன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

30ம் தேதி மற்றும் அக்டோபர் 1, 2ம் தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழக மாவட்டங்களில் இன்று அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் 2 - 3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக் கூடும்.

# விவசாயிகள் சாகுபடி செய்யும் விதைகளை பிற இரகலவன் பரிசோதனை செய்து தரமான விதைகளை பயன்படுத்த வேண்டுகோள்!

**விதைபரிசோதனையில் பிற இரககலவன் பரிசோதனை ஏன்?**

நல் வித்தே நல் விளைச்சலுக்கு ஆதாரம். விதையே விவசாயத்தின் மூலதனம் என்பதற்கு ஏற்ப விதைப்பு செய்யப்படும் விதைகள் தரமான விதைகளாக இருக்க வேண்டும். ஒரே இரக விதைகள் ஒரே சமயத்தில் வளர்ச்சியடைந்த பூத்துபழுதின்றி அதிக மகசூல் கொடுக்கிறது. விதைப்பிற்கு பயன்படுத்தப்படும் விதைகளில் பிற இரகங்களின் கலப்பு குறிப்பிடப்பட்ட அளவுக்கு மேல் இருந்தால் அடுத்த பருவத்தில் பயன்படுத்தும் போது பூக்கும் பருவம், பயிர்களின் உயரம், அறுவடை காலம் ஆகியவை மாறுபட்டு இருக்கும். பிற இரகம் கலந்த விதைகளை விதைப்பதால் நோய் தடுப்பு, கலவன் செலவு அதிகமாவதுடன் விதையின் தரம் குறைகிறது மற்றும் நிகர மகசூலும் குறைகிறது.

**பிற இரகவிதைகள்**

ஒரே இரகவிதைகள் விளைவதற்கு முதலானதாகும். இவ்வாறு முதன்மையான இனம் வகிக்கும் விதைகள் பிறரக விதைகள் கலந்து இருத்தல் விதைகளின் பாரம்பரிய சுத்தம் பாதிக்கப்படுகின்றது அரிசி அல்லது உறைபொருளின் தரமும் குறைந்து விடுகிறது. விளைச்சல்கள் பாதிக்கப்படும். ஆகையால் பிறரக விதைகள் கலப்பு தடுக்க வேண்டும். பிறரக விதைகளை பார்த்து பிரித்து அகற்றி பயிரின் மகசூலையும் தரத்தையும் அதிகரிக்க வேண்டும்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைக்குவியலில் பிறரக விதைகள் கலந்துள்ளனவா என்பதை நுண்ணோக்கி மூலம் கண்காணித்து இரகத்தின் குணநலன்களை கருத்தில் கொண்டு பிரித்தறியப்படுகிறது. உதரணமாக நெல்லை பொருத்தவரை சான்று விதையானால் 0.2 சதத்திலும் ஆதார விதைகளில் அதிகபட்சமாக 0.05 சதத்துக்குள்ளும் பிற இரக விதைகள் இருக்கலாம். மக்காச்சோளம், தட்டைப்பயிறு, கொள்ளு, பட்டாணி, கொண்டைக்கடலை, ஆமணக்கு ஆகிய பயிர்களுக்கு ஆதார விதைகளில் 5 எண்கள்/கிலோவிற்கும், சான்று விதைகளில் 10 எண்கள்/கிலோவிற்கும் மற்றும் சோளம், துவரை, உளுந்து, பாசிப்பயறு, எள், வெண்டை,

கீரை, கொத்த வரை ஆகிய பயிர்களுக்கு ஆதார விதைகளில் 10 எண்கள்/ கிலோவிற்கும் சான்று விதைகளில் 10 எண்கள்/கிலோ-விற்கும் பிறரக கலப்பு மிகாமல் இருக்கவேண்டும்.

எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் விதைக் குவியலில் இருந்து விதை மாதிரிகளை விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/-ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுடன் நெல் விதை 400 கிராம், மக்காச்சோளம் பயறு வகைகள் 1 கிலோ, எள் 70 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் No.30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை 622 002 என்ற முகவரிக்கு அனுப்பி விதையின் பிற இரககலவன் மற்றும் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டுமாறு மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ரா தேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# தலைவாசல் அருகே விவசாயிகளுக்கு துவரை சாகுபடி பண்ணை பள்ளி வகுப்பு



சேலம், செப்.26

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், வேளாண்மை துறையில் உள்ள அட்மா திட்டத்தின் கீழ் துவரை பண்ணைப் பள்ளி முதலாவது வகுப்பு நாவலூர் கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா தலைமை வகித்தார். மரவள்ளி மற்றும் ஆமணக்க ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் வேல்முருகன், துவரை பயிர் சாகுபடிக்கு ஏற்ற பருவம், விதை தேர்வு, நாற்றங்கள் விடும்முறை மற்றும் சாகுபடிக்கு நிலம் தயாரித்தல் எவ்வாறு என்பதை குறித்து பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விபரம் பற்றி எடுத்துக் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, மண்மாதிரி எடுத்தலின் முக்கியத்துவம் குறித்து பேசினார். மேலும் துவரை நாற்றங்கால் விடுவது பற்றிய செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த பண்ணை பள்ளி வகுப்பில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பவானிசாகர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தில் செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி



ஈரோடு, செப்.26

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரத்தில் இக்கரைதத்தப்பள்ளி கிராமத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலை சார்பாக செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி பவானிசாகர் வேளாண்மை உதவி இயந்குநர் பொ.யசோதா தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய கரும்பு சாகுபடி முறை மற்றும் செம்மை கரும்பு சாகுபடி செய்யும் முறைகளில் உள்ள வேறுபாடுகள், செம்மை கரும்பு சாகுபடியின் முக்கியத்துவம் குறித்தும், சொட்டுநீர் பாசனம் அமைக்கும் முறைகள், மானியத் திட்டங்கள், ஊடுபயிர் சாகுபடி மேற்கொள்ளுதல், கூடுதல் வருமானம் ஈட்டுதல் போன்றவை குறித்து தெளிவாக வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் விவசாயிகளுக்கு எடுத்தக் கூறினார். மேலும் துறையின் மூலம் வழங்கப்படும் மானியங்கள் துவரை நாற்று நடவு முறையின் பயன்கள் போன்றவை குறித்தும் விளக்கிக் கூறினார்.

செம்மை கரும்பு சாகுபடியில் விதை பருக்கள் தேர்வு, நாற்றாங் கால் தயாரித்தல், கரும்பு நடவு, நடவு செய்யும் கருவி மூலம் கரும்பு நாற்று நடவு செய்யும் தொழில்நுட்பங்கள் மற்றும் பாராமரிப்பு செலவுகள் பற்றி பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலை கரும்பு மேலாளார் மோகன் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

பவானிசாகர், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் சத்தியசீலன் கரும்பு பயிரை தாக்கும் பூச்சி நோய்கள் தட்பவெப்ப நிலை, காலத்திற்கேற்ப புதிது புதிதாக உருவாகும் பூச்சி மற்றும் நோய்கள், அதன் அறிகுறிகள், கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்தும் இயற்கை வழியில் கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

செம்மை கரும்பு சாகுபடியில் உர மேலாண்மை மற்றும் நீரில் கரையும் உரங்கள் பயன்பாடுகள் பற்றியும் கரும்பு பயிருக்கு சொட்டு நீர்பாசன மானியங்கள் பற்றி பவானிசாகர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் விவசாயிகளுக்கு எடுத்த கூறினார். மேலும் இப்பயிற்சியில் 50 மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இப்பயிற்சிக்கான முன் ஏற்பாடுகளை வே.தொ.மே.மு. திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | | 26.09.2024 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | | |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 | | |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 | | |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 58 | | |
| 2 | வெண்டை | 28 | 32 | 58 | மேரக்காய் | 20 | 24 | | |
| 3 | தக்காளி (நாடு) | 33 | 36 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 28 | 32 | | |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 33 | 60 | கேரட் | 50 | 55 | | |
| 5 | அவரை(பிஸ்கட்) | 35 | 38 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 46 | | |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 | | |
| 7 | பீர்க்கன் | 25 | 28 | 63 | டர்னிப் | 45 | 50 | | |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 | | |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 | | |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 45 | 50 | | |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 | | |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 314 | | |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 50 | 136 | | |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 100 | 120 | | |
| 15 | சி.வெங்காயம் | 44 | 48 | 71 | பென்னி பீன்ஸ் | 48 | 52 | | |
| 16 | பெ.வெங்காயம் | 46 | 59 | 72 | குடமிளகாய் | 48 | 55 | | |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 28 | 73 | ஊட்டி அவரை | 130 | 145 | | |
| 18 | பச்சை மொச்சை | 45 | 50 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 | | |
| 19 | முருங்கை | 70 | 78 | 71A | | | | | |
| 20 | தேங்காய் | 54 | 57 | | | | | | |
| 21 | | | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 135 | 144 | | |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 | | |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 | | |
| 28 | கறிவேப்பிலை | 38 | 42 | 79 | மாதுளை | 200 | 240 | | |
| 29 | கொத்தமல்லி | 75 | 80 | 80 | திராட்சை | 80 | 90 | | |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 | | |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 | | |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 | | |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 45 | | |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 | | |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 | | |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 | | |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 | | |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 | | |
| 40 | கோவக்காய் | 22 | 26 | 91 | பூவன் | 45 | 50 | | |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 | | |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 | | |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 | | |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 | | |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 | | |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 | | |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 | | |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 | | |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 | | |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 | | |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 | | |
| 52 | | | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 38 | 42 | | | | | | |

# இப்கோ சாகரிகா (கடற்பாசி உரம்)–ஓர் பார்வை

சாகரிகா குருணை மற்றும்திரவ உரமானது கடற்பசியால் ஆன உயிர் ஊக்கிகளை கொண்டது. இதில் 14 – 18 % சாம்பல் சத்துகள், பயிர் வளர்ச்சிக்கு தேவையான அமினோ அமிலங்கள், வளர்ச்சி ஊக்கிகள், பேரூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

**சாகரிகா மற்றும் சாகரிகா கோல்ட் குருணை உரம்**

ஒரு ஏக்கருக்கு 10 கிலோ குருணை உரத்தை அடி உரமாக இடவேண்டும். மேலும், நடவு செய்த 15–20 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ குருணை உரத்தை இடவேண்டும்.

நீண்ட கால பயிர்களில் ஒரு செடிக்கு 100–150 கிராம் சாகரிகா குருணை உரத்தை பயன்படுத்தலாம்.

**சாகரிகா மற்றும் சாகரிகா கோல்ட் திரவ உரம்**

**இலை வழி தெளிப்பு**

ஒரு லிட்டர் நீருக்கு 2–5 மி.லி. சாகரிகா திரவ உரத்தை கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான கிளைப்பு/தூர்விடும் பருவம், பூக்கும் பருவத்திற்கு முன் மற்றும் பூக்கும் பருவத்திற்கு பின் மூன்று தெளிப்பாக தெளிக்கவும்.

சாகரிகா திரவ உரத்தை இலைவழி தெளிப்பு மூலமாகவோ அல்லது சொட்டு நீர்ப்பாசனம் மூலமாகவோ பயன்படுத்தலாம். சாகரிகா திரவ உரத்துடன் நானோ திரவ உரங்கள், முற்றிலும் நீரில் கரையக்கூடிய உரங்கள், வேளாண் பூச்சிகொல்லி மருந்துகளும் கலந்து பயன்படுத்தலாம்.

**நன்மைகள்**

- விதையின் முளைப்புதிறனை மேம்படுத்தும்.
- பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கும்.
- பயிரின் வேர் வளர்ச்சியை வலுப்படுத்தும்.
- கரிம மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு திறனை அதிகரிக்கும்.

● வறட்சி, வெப்பம், குளிர் மற்றும் உப்புத்தன்மை போன்ற சூழலின் அழுத்தங்களுக்கு பயிரின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

- ADVT.



# கிராம அடிப்படை பயிற்சி முகாம்

சேலம், செப்.26

சேலம் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் வேளாண்மைத் துறை சார்ந்த கிராம அடிப்படை பயிற்சி முகாம் வீரபாண்டி வட்டாரம் இனாம் பைரோஜி கிராமத்தில் நடைபெற்றது.




இனாம் பைரோஜி ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கோகிலாம் பாள் சங்கமேஸ்வரன் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ தலைமை தாங்கி மண் மாதிரி சேகரித்தல், உயிரியல் விதை நேர்த்தி மற்றும் இரசாயன விதை நேர்த்தி முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பூச்சி, நோய் மேலாண்மை, அறுவடை மற்றும் அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கி கூறினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் யு.ஸ்ரீ நிறைமதி கிராம அடிப்படை பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம், உழவர் அமைப்பாளர்கள் பற்றி எடுத்து கூறினார்.

வேளாண் பொறியியல் துறை உதவிப்பொறியாளர் கே.சங்கர் குமார், தோட்டக்கலை அலுவலர் கே.கே.ஸ்ரீ விலாசினி, வேளாண் வணிக உதவி வேளாண்மை அலுவலர் எஸ்.சந்தர் ஆகியோர் தமது துறை சார்ந்த மானிய திட்டங்களை எடுத்து கூறினர். நெல் விதைகள் உயிரியல் பூஞ்சாண கொல்லி டிரைகோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

மேலும் பார்த்தீனியம் களைகள் கட்டுபடுத்துவதன் நோக்கம் பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் பி.கிருஷ்ண மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர் ஆ.குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் மற்றும் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தூய்மையே சேவை என்னும் திட்ட விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்ற வேளாண் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள்



மதுரை, செப்.26

மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இணைந்து நடத்திய 55 வது நாட்டு நலப்பணித் திட்ட தினவிழா செப்டம்பர் 24 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர் பே.ப.மகேந்திரன், சமுதாய அறிவியல் கல்லூரி முதன்மையர் முனைவர் ச.காஞ்சனா, நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 2022, 2023 குழு மாணவர்களாகிய 500க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து , ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 2 ஆம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்ட பிரதிநிதிகள் என பலரும் இவ்விழாவின் சிறப்பைப் பற்றி உரையாற்றினர்.

விழாவின் துவக்க உரையாக நாட்டு நலப்பணித் திட்டப் பிரதிநிதியும் மற்றும் தன்னார்வலருமான சீனிவாசன் வரவேற்புரை வழங்கி அனைவரையும் வரவேற்றார். இதன் பிறகு நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆனந்தி இந்நலத் திட்டத்தின் ஒரு வருடத்திற்கான ஆண்டறிக்கை வாசித்தார். பின்னர் முனைவர் ரேவதி வாழ்த்துரை வழங்கினார். அவர்களது உரையில் 'தூய்மையே சேவை' என்னும் திட்டத்தை பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்கினார். இவ்விழாவின் தலைமையுரை முதன்மையர் முனைவர் பே.ப. மகேந்திரனால் வழங்கப்பட்டது. இவர் நாட்டு நலப் பணித்திட்ட தன்னார்வலர்களையும் அவர்களது முயற்சிகளையும் பாராட்டினார். முனைவர் ச.காஞ்சனா, முதன்மையர் சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சிறப்புரை வழங்கினார். நாட்டின் நலப்பணி என்பது வீட்டில் இருந்தே தொடங்குகிறது என்னும் சிறந்த கருத்தை, உரையில் முன் வைத்தார்.

இவர்களது உரையால் தன்னார்வலர்கள் தங்களது நலத்திட்ட முயற்சியை மேலும் தொடர ஊக்கமளித்தார். இதன் பின்னர் நாட்டு நல பணித் திட்டப் பிரதிநிதியும் மற்றும் தன்னார்வலருமான இரண்டாம் ஆண்டு மாணவர் எம்.சபரிநாதன் நன்றியுரை வழங்கினார்.

மேலும் இவ்விழாவிற்கு சிறப்பு சேர்க்கும் விதமாக ’தூய்மையே சேவை’ என்னும் மத்திய அரசின் திட்டத்தை இரு கல்லூரி முதன்மையர்கள் துவக்கி வைத்து விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. பின்னர் தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

விழாவின் நிறைவுக்கு பின்னர் தன்னார்வலர்கள் கல்லூரி வளாகத்தை சுற்றியுள்ள நெகிழி மற்றும் குப்பைகளை அகற்றி நாட்டின் நலப்பணி என்பது நம்மிடம் இருந்தே தொடங்குகிறது என்பதை மிகச் சிறப்பாக வலியுறுத்தினர்.



# இலைகளுக்கு இத்தனை பெயர்களா? தெரியுமா?



தாவரங்களின் (மரம், செடி, கொடி) இலைகளுக்கு பல்வேறு வகையான பெயர்கள் தமிழில் உள்ளது. இந்த பெயர் களுக்கான சொற்களுக்குள்ளே இலக்கணம் மட்டுமல்லாது தாவர அறிவியலும் அடங்கி இருக்கின்றன என்றால் ஆச்சரிய மாக இருக்கிறதல்லவா? இதுவே தமிழின் சிறப்பும் கூட. ஓரே பொருளை (இலை) பல்வகையான பெயர்களில் அழைப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. பெயர் வைப்பதில் உலகத்திற்கே முன்னோடி தமிழன் தான் என்பதில் நமக்கும் தாய் மொழியான தமிழுக்கும் பெருமை தானே. இலை என்பது மரஞ்செடிகளின் ஓர் உறுப்பு. அதன் மூலமாக தான் தங்களுடைய உணவு தேவையை சூரிய ஒளி மூலமாக பெற்று ஒளிச்சேர்கை வாயிலாக தயாரிக்கிறது.

**இலைகள் ஒரு விதம் பெயர்கள் பலவிதம்? எப்படி?**

1) அரசு, ஆல், அத்தி, வேம்பு, பலா, வாழை, மா, பூவரசு (இன்னும் பல மரங்களின் இலைகளுக்கு) பெயர் ‘இலை‘ என்று தான் அழைக்கப்படுகிறது.

2) அகத்தி, தண்டு, பசலி, முருங்கை, வல்லாரை போன்ற வற்றின் இலைகளுக்கு ‘கீரை ‘ என்று பெயர்.

3) அருகு, கோரை போன்ற களைச்செடிகளின் இலை களுக்கு ‘புல்‘ என்று பெயர்.

4) நெல், வரகு, சாமை முதலியவற்றின் இலைகளுக்கு ‘தாள்‘ என்று பெயர்.

5) கம்பு, சோளம், கேழ்வரகு (கேப்பை) போன்றவற்றின் இலைகளுக்கு ‘தட்டை‘ (தட்டு) என்று பெயர்.

6) சப்பாத்தி கள்ளி, தாழம்பு போன்ற வகையான இலைகளுக்கு ‘மடல்‘ என்ற பெயர்.

7) கரும்பு, நாணல் போன்றவற்றின் இலைகளுக்கு சோகை (தோகை) என்று பெயர்.

8) தென்னை, பனை போன்றவற்றின் இலைகளுக்கு (ஓலை) கீற்று என்ற பெயர்.

9) நிலக்கடலை, பாசிபயறு, உளுந்து போன்றவற்றின் இலைகளுக்கு 'கொடி' என்று பெயர்.

10) கமுகு, பாக்கு இவற்றின் இலைகளுக்கு 'கூந்தல்' என்று பெயர்.

இலைகளை பல பெயர்களில் நாம் அழைத்தாலும் அவற்றின் செயல்பாடுகள் ஒன்றாக தான் இருக்கும்.

இவ்வாறாக தமிழில் இலைகளின் பெயர் வைக்கப்பட்டுள்ளது என்று எண்ணி பெருமை படுவோம். அழகு தமிழை எண்ணி ஆனந்தம் அடைவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நெல் வயல்வெளி பள்ளி வகுப்பு துவக்கம்



திருச்சி, செப்.26

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், மண்ணச்சநல்லூர் அத்தானியில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் நெல் வயல்வெளி பள்ளி வகுப்பானது 25.9.24 அன்று தொடங்கப்பட்டது. மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி தலைமையேற்று தமிழ் நாடு நீர்வள நிலவள திட்டம் குறித்தும் நடப்பு ஆண்டில் உள்ள திட்டங்கள் குறித்தும் விரிவாக உரை ஆற்றினார். வேளாண்மை அலுவலர் பரமசிவம் விதை தேர்வு, விதை நேர்த்தி, நாற்றங்கால் பராமரிப்பு மற்றும் உயிர் உரங்கள் பயன்பாடுகள் குறித்து ஆற்றினார். விதை சான்றளிப்பு துறையின் சார்பில் விதை சான்று அலுவலர் ரமேஷ் சான்று பெற்ற விதைகள் குறித்தும் விதை பண்ணை அமைப்பது குறித்தும் உரை ஆற்றினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அபிராமி நன்றி உரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மண்ணச்சநல்லூர் வேளாண்மை உதவி அலுவலர் பார்த்திபன் செய்திருந்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# எஸ்.புதூர் வட்டாரத்தில் கிசான் கோஸ்திஸ் – விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்



சிவகங்கை, செப்.26

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரத்தில் 2024-25ம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராம பஞ்சாயத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ் திஸ் விழிப்புணர்வு முகாம் குன்னத்தூர் கிராமத்தில் 25.9.24 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தற்கு வேளாண்மை உதவி இயக்குநர் அ.அம்சவேணி தலமையேற்றும், கிராம பஞ்சாயத்து தலைவர் சிலம்புசெல்வன் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்தவேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யபட்ட இந்த பஞ்சாயத்தில் தரிசு நிலங்களை விளைநிலமாக மாற்றும் நோக்கத்தில் 15 ஏக்கர் கொண்டதரிசுநிலத் தொகுப்புதேர்வு செய்யபட்டு அந்த தொகுப்பிற்கு ஆழ்துளை கிணறு சோலார் மோட்டர் இணைப்பு நுண்ணீர் பாசணம் அமைத்து பழ மரக்கன்றுகள் நடுவது குறித்தும் 1 பண்ணை குடும் பத்திற்கு 2 தென்னை கன்றுகள் இலவசமாக வழங்குதல் மானிய விலையில் பண்ணை கருவிகள் வழங்குதல் விவசாய இடு பொருட்கள் தார்பாய் வழங்குதல் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் ப.கார்த்திகா, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் மூலம் வழங்கப்படும் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றியும் தேவைபடும் ஆவணங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். மேலும் வேளாண் பொறியியல் துறை மூலம் பொறி யியல் துறை செயற்பொறியாளர் சீனிவாசன் கூட்டத்தில் கலந்து கொண்டு இத்திட்டத்தின் மூலம் ஆதி திராவிட விவசாயி களுக்கு இலவசமாக ஆழ்துளை கிணறு அமைத்து சோலர் மோட்டார் அமைத்து தருதல், பவர் டில்லர் மானியத்தில் வழங்குதல் மின்சார மோட்டார் 50 சதம் மானியத்தில் வழங்குதல் குறித்து எடுத்துரைத் தார். மேலும் ஊரக வளர்ச்சி துறையிலிருந்து தோட்டக் கலைத் துறை மூலமாக செயல்படுத்தும் திட்டங்களை உதவி தோட்ட கலை அலுவலர் மனோஜ் தோட்டகலைத் துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானியங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். தொடக்க வேளாண்மை கூட்டுறவுத் துறை செயலாளர் கலைதாஸ் பயிர்கடன் வழங்கும் முறை பற்றி எடுத்து கூறினார். வனத்துறை மூலமாக வனக்காப்பாளர் லெட்சுமி, வனத்துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வேளாண் அறிவியல் நிலையம் குன்றக்குடி உதவி பேராசிரியர் விமலேந்திரன், பயிர் சாகுபடி முறைகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய இரகங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் வணிக உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ், ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் தேங்காய் கொப் பரை கொள்முதல் நெல் உளுந்து கொள்முதல் மற்றும் மதிப்பு கூட்டும் தொழில்நுட்பங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். வருவாய் துறையின் மூலம் கிராம நிர்வாக அலுவலர் பாலசுப்ர மணியன், சிறு, குறு விவசாயிகளுக்கு சான்று பட்டா மாறுதல் குறித்த விபரங்களும் விரிவாக எடுத்து கூறப்பட்டது. சிவராமன், இயற்கை விவசாயி கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் சாகுபடி முறை பற்றியும் அதன் பயன்கன் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் கிராம பொதுமக் களுக்கும் உதவி வேளாண்மை அலுவலர் இளங்கவி நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சிக்கு உண்டான ஏற்பாட்டினை வட்டார தொழில் நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்க செல்வி மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் ம.விஜய்ஆனந்த் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.


பைட்டோவிட்டா (FYTOVITA)

Stanes

“வைட்டமின் சத்துக்களைக் கொண்ட பயிர் ஊக்கி”

பயன்கள்

- வளர்ச்சி மற்றும் பூக்கும் தருணத்தில் பைட்டோவிட்டா தெளிப்பதால், **பூக்கள் அதிகம் உருவாகுவதற்கும், மலரும் பூக்கள் உதிராமலும், மேலும் பிஞ்சுகளாக மாறவும் வழி செய்கிறது**
- அனைத்துப் பயிர்களின் விளை பொருட்களில் உள்ள திசுக்கள் திடப்படுவதனால் எடை அதிகரித்து கூடுதல் லாபம் கிடைக்கிறது

பயன்படுத்தும் முறை

ஏக்கருக்கு **500 மில்லி** (அ) **5 மில்லி** அளவை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்)




84899 04949, 84899 10105

மேலும் விபரங்களுக்கு: www.tstanes.com

# நுன்னுயிர் உரங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம்



விருதுநகர், செப்.26

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீ வி ல் லி பு த் தூ ர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் ஆனந்தமுருகன், ஆகாஷ், எழில் ஆகாஷ், ஸ்ரீதர் நவீன், முகைதீன் பைசல், பாலசுப்ரமணியன், ஆகாஷ் குபேந்திரன் மற்றும் சந்தோஷ் சிவன் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தங்கி விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகளையும் செயல்முறை விளக்கமும் விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இம்மாணவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி, வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, பாட ஆசிரியர் டாக்டர். ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் சதீஷ் குமார் அறிவுரையின்படி, ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் உள்ள நரியங்குளம் கிராமத்தில் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசின் கீழ் வேளாண் துறையின் மூலம் வழங்கப்படும் நுன்னுயிர் உரங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் குறிப்பாக பாஸ்போபாக்டீரியா, சூடோ மோனாஸ் ப்ளோரசன்ஸ் குறித்தும் விரிவாக விளக்கினர்.

பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிரானது பயிருக்கு கிட்டா நிலையிலும், மண்ணில் கரையா நிலையிலும் உள்ள மணிச்சத்தினை, அங்கக அமில திரவங்களை சுரந்து அவற்றில் கரைய வைத்து பயிருக்கு எளிதாக கிடைக்கும் நிலைக்கு மாற்றுகின்றது. பாஸ்போ பாக்டீரியா இடுவதன் மூலம் எல்லா பயிர்களிலும் பத்து முதல் இருபது சதவீதம் வரை மகசூல் அதிகரிக்கின்றது.

சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் மண்ணின் மூலம் பரவும் நோய்களான வேரழுகல், வாடல் நோய், நாற்றழுகல் நோய் மற்றும் குண்டாந்தடி வீக்க வேர் நோய் போன்றவற்றை கட்டுப்படுத்து வதுடன் இலைவழி மூலம் பரவும் பூசண நோய்களான குலை நோய், இலையுறை கருகல் நோய், இலைப்புள்ளி நோய் மற்றும் ஆன்த்ராக்னோஸ் ஆகியவற்றின் பாதிப்பையும் குறைக்கிறது என்று விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்து கூறினர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# சம்பா சாகுபடிக்கு ஏற்ற நெல் இரகங்கள்

திருச்சிராப்பள்ளி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது,

**ஆடுதுறை – 54**

சம்பா பருவத்தில் அதிக மகசூல் தரக்கூடிய இந்த நெல் இரகம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தால் 2020-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த நெல் இரகம் 130 முதல் 135 நாட்கள் வயதுடையது. சம்பா மற்றும் தாளடி பருவத்தில் பயிரிட ஏற்றது. இந்த புதிய நெல் இரகம் வெள்ளைப் பொன்னி மற்றும் பானஸ்கத்தி ஆகிய நெல் இரகங்களை பெற்றோராக கொண்டது.

சராசரியாக ஏக்கருக்கு 2,520 கிலோ மகசூல் கொடுக்கக்கூடியது. மத்திய சன்ன அரிசியை தரவல்லது. வெள்ளைப் பொன்னிக்கு இணையான சமையல் பண்புகளை கொண்டது. தண்டுத்துளைப் பான், இலை மடக்குப்புழு, குலை நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது.

**கோ – 56**

சம்பா, பின் சம்பா மற்றும் தாளடி ஆகிய பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்ற இரகம். 2023 ஆண்டு கோயம்புத்தூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தால் சாகுபடிக்கு வெளியிடப்பட்டது. 130-135 நாட்கள் வயதுடையது. அதிக தூர் கட்டும் திறன் சாயாத தன்மை உடையது. குலை நோய், பாக்டீரியல் இலை கருகல், இலையுறை அழுகல், இலையுறை கருகல் மற்றும் பழுப்புப் புள்ளி நோய் களுக்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது. தண்டுத் துளைப்பான் மற்றும் ஆனைக்கொம்பன் ஆகிய பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது. மத்திய சன்ன அரிசியை அரவல்லது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,550 கிலோ வரை தரக்கூடியது.

**திருச்சி – 3**

2010-ஆம் ஆண்டு திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப் பட்டது. 135 முதல் 140 நாட்கள் வயதுடைய இந்த இரகம் களர், உவர் நிலங்களில் பயிரிட ஏற்றது. சம்பா மற்றும் தாளடி ஆகிய பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்றது. குலை நோய், இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் மற்றும் இலை உறை கருகல் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. இலை சுருட்டுப்புழு, தண்டுத் துளைப்பான் மற்றும் புகையான் பூச்சிகளுக்கு எதிர்ப்பு

திறன் உடையது. இட்லி செய்வதற்கு மிகவும் ஏற்றது. மத்திய பருமன் அரிசியை உடையது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,400 கிலோ வரை தரக்கூடியது.

**சி.ஆர் 1009 சப் – 1**

சம்பா பருவத்தில் ஏற்ற நீண்ட கால நெல் இரகம் 2016–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 150 முதல் 155 நாட்கள் வயதுடைய இந்த இரகம் வளர்ச்சி பருவத்தில் வெள்ளத்தை தாங்கி வளரும் தன்மை கொண்டது. குலை நோய், இலைப்புள்ளி நோய், புகையான் மற்றும் வெண்முதுகு தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புதிறன் கொண்டது. குட்டையான பருமன் அரிசியை கொண்டு அதிக மாவுச்சத்து இருப்பதால் இட்லி செய்வதற்கு மிகவும் ஏற்றது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,300 கிலோ வரை தரக் கூடியது.

**கோ – 50**

மத்திய கால (130–135 நாட்கள்) வயதுடைய கோ–50 நெல் இரகம், கோ–43 இரகத்தையும் ஏடிடீ–38 நெல் இரகத்ததையும் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டது. சிறந்த தாவர பண்புகளை உடைய இந்த நெல் இரகம் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 2,530 கிலோ மகசூல் தரவல்லது. அதிக விளைச்சல் பெறுவதற்கு உகந்த சிறந்த தாவர பண்புகளான சாயாத தன்மை, நடுதத்தர உயரம் (100–120 செ.மீ) அதிக ஒளி சேர்க்கை நடைபெறுவதற்கு தேவை யான கரும் பச்சை நில இலைகள், நன்கு நீண்ட (55 செ.மீ) மற்றும் அகலமான (2 செ.மீ) இலையை பெற்றிருப்பதுடன் நீளமான செங்குத்தான இலையை உடையது. நீண்ட நெற்கதிரும், ஒரு கதிருக்கு 350 முதல் நெல் மணிகளையும் கொண்டது.

இந்த இரகம், பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு தன்மை உடையது. குறிப்பாக குருத்து பூச்சி, இலை சுருட்டுப்புழு ஆகிய பூச்சிகளுக்கும், குலை நோய், இலையுறை அழுகல், பாக்டீரியல் இலை கருகல், துங்ரோ ஆகிய நோய்களுக்கும் மிதமான எதிர்ப்புத் திறன் உடையது. மத்திய சன்ன அரிசியை உடைய இந்த இரகம் நல்ல அரவைத்திறனும் (71.6 சதம்) முழு அரிசி (60 சதம்) காணும் திறனும் உடையது. ஒட்டாத சாதத் தன்மை கொண்டது. சமைப்ப தற்கும், இட்லி தயாரிக்கவும் உகந்த இரகமாகும்.

**கோ – 52**

பின் சம்பா மற்றும் தாளடி பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்ற இரகம். 2017 ஆண்டு கோயம்புத்தூர் நெல் ஆராய்ச்சி நிலையத் தால் சாகுபடிக்காக வெளியிடப்பட்டது.

இந்த நெல் இரகம் பி.பீ.டி – 5204 மற்றும் கோ – 50 ஆகிய நெல் இரகங்களை பெற்றோராக கொண்டது. மத்திய கால இரகம் (130-135 நாட்கள்). புகையான் மற்றும் பச்சை தத்துப்பூச்சி ஆகிய வற்றிற்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது.

குலை நோய், இலையுறை அழுகல், இலையுறை கருகல் மற்றும் பழுப்புப் புள்ளி நோய்களுக்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது. வெள்ளை நிற மத்திய சன்ன அரிசியை தரவல்லது.

அதிக அரவைத் திறனும் முழு அரிசி காணும் திறன் உடையது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,475 கிலோ வரை தரக்கூடியது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வத்தலக்குண்டு வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி



திண்டுக்கல், செப்.26

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் (KAVIADP) – விராலிமாயன் பட்டி கிராமத்தில் எண்ணெய் வித்துகள் பதப்படுத்துதல் மற்றும் அறுவடை பின் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.நாகேந்திரன், விவசாயிகளை வரவேற்று, வேளாண்மை துறையில் உள்ள திட்டங்களையும் உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்




என்ற விபரங்களையும் விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார், அதன்பின் RVS தோட்டக்கலை கல்லூரி உதவி பேராசிரியர் ஜெ.கார்த்திக்குமார், எண்ணெய் வித்து பயிர்களின் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார். பின்பு வட்டார தொழில்நுட்ப மேளாளர் க.சப்பாணி முத்து, அட்மா திட்டத்தில் உள்ள விபரங்களை எடுத்து கூறினார். இந்த நிகழ்சியின் ஏற்பாடுகளை வட்டார உதவி தொழில் நுட்ப மேளாளர் ம.மகேந்திரன் மற்றும் விஜயலெட்சுமி செய்திருந் தனர். இறுதியில் உதவி வேளாண்மை அலுவலர் முத்துலெட்சுமி நன்றி கூறினார்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்

Stanes




பயோ நெமட்டான்

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

பயன்படுத்துவீர்...

பயோ நெமட்டான்

"நூற்புழுக்களின் எதிரி"

இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938

# கால்நடைகள் விசம் தின்று விட்டால் சிகிச்சை அளிக்கும் முறைகள்

கால்நடைகள் பூச்சிக்கொல்லி, எலி மருந்து (வார்பெரின்), நத்தை கொல்லி (மெட்டால்டிகைடு), பூச்சிக்கொல்லி, பிளிச்சிங் பவுடர், வெள்ளை ஸ்பிரிட், நஞ்சு செடிகள் மற்றும் மருந்து வகைகள் ஆஸ்பரின் (பூனைக்கு ஒத்துக்கொள்ளாது) ஃபுனோபார்பிட்டால் மற்றும் டையசிபாம் பொன்ற மருந்துகளின் அளவு அதிகமாகும் போது கால்நடைகளுக்கு விசமாகிறது.

கால்நடைகளில் மேற்கூறிய காரணத்தினால் விசத்தாக்கம் ஏற்பட்டுவிட்டால், முறையான கீழ்க்கண்ட விபரங்களை சேகரிக்க வேண்டும்.

1. எப்பொழுது கால்நடை விசத்தை தின்றது?

2. எந்த வகையான விசம்?

3. எவ்வளவு விசத்தை தின்றது?

4. உண்மையிலேயே விசம் தின்றதா?

5. கால்நடைகளின் வகை, இனம் மற்றும் வயது போன்ற விபரங்கள் என்ன?

6. கால்நடைகளில் காணப்படும் நோய் அறிகுறிகள் என்ன? அதாவது வாந்தி, வயிற்றுப்போக்கு, சுறுசுறுப்புயின்மை, நினை விழப்பு, வலிப்பு, தசை நடுக்கம், வயிற்று வலி, கோலை வடிதல் மற்றும் பெருமூச்சு விடுதல் போன்ற அறிகுறிகள் பொதுவாக காணப்படும்.

**சிகிச்சை முறைகள்**

1. விசப் பொருளை அகற்றிவிடவேண்டும். ஆக்ஸிஜன் கொடுக் கலாம். கால்நடைகளின் உடம்பில் விசப்பொருட்கள் ஒட்டி இருந்தால் கழுவி விடலாம். மறுபடியும் விசப் பொருட்களை கால்நடைகள் தின்று விடாமல் இருக்க, அவற்றை பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும்.

2. கால்நடைகளுக்கு எதனால் விசம் ஏற்பட்டுள்ளது என கண்டறிந்து, அதற்கு தகுந்த விச முறிவு மருந்தை கொடுக்க வேண்டும். உதாரணமாக வார்பெரின் விசத்தாக்குதலுக்கு வைட்டமின் கே கொடுத்தால் போதும்.

3. விசம் வயிறு மற்றும் குடல் பகுதியில் உறிஞ்சப்படாமல் தடுக்க பின்வரும் சிகிச்சை முறைகளை கையாளலாம்.

**அ. வாந்தி எடுக்க வைக்க வேண்டும்**

இரண்டு கரண்டியளவு கடுகை ஒரு டம்ளர் வெதுவெதுப்பான தண்ணீருடன் சேர்த்து கொடுக்கலாம். அல்லது ஒன்று அல்லது இரண்டு துண்டு சலவை சோடாவை நாக்கிற்கு அடியில் வைக்க வேண்டும். இந்த சிகிச்சை முறைகளை பண்ணையாளரே செய்ய லாம். மேலும் உப்புக் கரைசலை ஒரு போதும் கொடுக்கக்கூடாது. ஏனெனில் அதுவே விசம் ஆகிவிடும். மேலும் கால்நடை மருத்துவர்கள் அபோமார்பின் 0.1 மி.கி / கிலோ எடை அடித்தோல் ஊசி மூலம் கொடுக்கலாம். அல்லது ஜைலசின் 3.0 மி.கி / கிலோ எடை தசை ஊசி மூலம் கொடுக்கலாம்.

**ஆ. வயிற்றை கழுவி விடுதல்**

விசத்தை தின்று 4 மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டால், விசம் வயிறு மற்றும் குடல் பகுதியில் உறிஞ்சப்பட்டிருக்கும். அதனால் வயிற்றிலுள்ள பொருளை கழுவவேண்டும். கால்நடைகளுக்கு மயக்க மருந்து கொடுத்து, வெதுவெதுப்பான தண்ணீர் அல்லது சலைனை இரப்பர் குழாய் மூலமாக வயிற்றுக்குள் செலுத்த வேண்டும். இதே போன்று திரும்ப திரும்ப, வடியும் தண்ணீர் தெளிவாக வரும் வரை, செய்யவேண்டும். மரக்கரித்தூளை கொடுக்கலாம்.

**இ. பேதி எடுக்க வைத்தல்**

குடல் மற்றும் வயிற்றுப் பகுதியில் அரிப்பை ஏற்படுத்தும் விசத்தை கால்நடைகள் தின்று விட்டால், வயிற்றுப்போக்கை உண்டு பண்ணும் சிகிச்சை தரலாம்.

**ஈ. நோயை தனிக்கும் மருந்து கொடுத்தல்**

தின்ற விசப்பொருள் உணவுப்பாதையில் எரிச்சல் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தால், பச்சை முட்டையை பால் மற்றும் சர்க்கரை கலந்து அடித்து கொடுக்கவேண்டும். இவை உணவு பாதையின் மேல் சவ்வுகளை மூடி பாதுகாக்கும்.

**கால்நடைகளின் உடம்பில் ஒட்டியிருக்கும் விசப்பொருளை அகற்றுவதற்கான சிகிச்கை முறை**

கால்நடைகளின் உடம்பில் விச பொருள்கள் ஒட்டியிருந்தால், கால்நடைகளை தண்ணீர் கொண்டு கழுவி விடலாம்.

1. எண்ணெய் வகை விசப் பொருள்களால் விசம் ஏற்பட்டிருந்தால் (கிரியோசொட் மற்றும் சம்ப் எண்ணெய்), கால்நடைகளை சமையல் எண்ணெய் அல்லது பாரபின் கொண்டு கழுவலாம்.

2. கிருமி நாசினியால் விசம் ஏற்பட்டிருந்தால், சுடு தண்ணீரைக் கொண்டு கழுவ வேண்டும். சோப்பை பயன்படுத்தக்கூடாது, ஏனெனில்

சோப்பு தோல் வழியாக விசம் உறிஞ்சுவதை அதிகப்படுத்தி விடும்.

3. திட எண்ணெய் வகை பொருட்களால் (தார்) விசத்தாக்கம் ஏற்பட்டிருந்தால், உடம்பில் பாதிக்கப்பட்ட இடத்திலுள்ள உரோமங்களை வெட்டிவிட்டு, வெண்ணெய், சமையல் எண்ணெய் வகைகள் மற்றும் பாரபின் முதலியவற்றை அந்த இடத்தில் தடவலாம். பின்பு தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும்.

தகவல் : **முனைவர் ந.ராணி மற்றும் முனைவர் கு.பொன்னுதுரை, கால்நடை ஒட்டுண்ணியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்.**

